# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:203/பேரூ/2025**
**நாள் : 03.11.2025**

S.D. ராஜ்கபூர்,
குச்சனூர்,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
குச்சனூர் பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், குச்சனூர், வார்டு 7, பள்ளிவாசல் தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. S.D. ராஜ்கபூர் என்பவரது 16.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.06.2025 அன்று பெறப்பட்டு, 203/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், குச்சனூர், வார்டு 7, பள்ளிவாசல் தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. S.D. ராஜ்கபூர் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 16.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். குச்சனூர் பேரூராட்சியில் திருமதி. சசிகலா, செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி ஆகியோர் பணிபுரிந்த காலத்தில் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், எனது வாக்காளர் பட்டியலில் உள்ள வார்டு எண்ணை மாற்றி 11–வது வார்டுக்கு மாற்றி உள்நோக்கத்துடன் செயல்பட்டதற்கும், அவர்களால் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் ஆகியவற்றிற்கும் இழப்பீடு வாங்கி தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ப. முருகன் என்பவர் தனது 03.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.205/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியில் 19.02.2022ம் நாள் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் வார்டு மாற்றி 11-வது வார்டுக்கு மாற்று உள்நோக்கத்துடன் செயல்பட்டதற்கும், அவர்களால் ஏற்படுத்திய மன உளைச்சல் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் ஆகியவற்றிற்கும் இழப்பீடு வழங்கிட கேட்டுள்ளதற்கு பதில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலுக்கு உத்தமபாளையம் வாக்குப்பதிவு அலுவலர் அவர்களிடமிருந்து 09.12.2021ஆம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் பெற்று குச்சனூர் பேரூராட்சி 12 வார்டுகளுக்கு குச்சனூர் பேரூராட்சி வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கான 09.12.2021 நாளிட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதில் தேர்தல் விதி 18(1)-ல் குறிப்பிட்டுள்ளபடி 12 வார்டுகளில் வாக்காளர் பட்டியல் பிரிக்கப்பட்டதில் ஆட்சேபனையிருந்தால் 1950ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் 1960ஆம் ஆண்டு வாக்காளர் பதில் விதிகளின்படி மேற்படி சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அதிகாரிகளால் சேர்க்கவோ, நீக்கவோ, திருத்தவோ செய்துதான் வரும் ஆணைகள் வரப்பெற்ற நாம் பேரூராட்சி வாக்காளர் பட்டியலில் முறையாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரிடமிருந்து ஆட்சேபனை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள 7-வது வார்டில் சேர்ப்பது தொடர்பாக எந்த ஆணையும் சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அதிகாரி அவர்களிடமிருந்து உத்தரவு ஏதும் வரப்பெறவில்லை. குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் அதிகாரம் ஏதுமில்லை. மேலும் 19.02.2022ல் குச்சனூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தேர்தல் நடைபெற்று மன்றம் அமைக்கப்பட்டுவிட்டது. தேர்தல் நடைபெற்ற தேதிக்கு முன்பு குறிப்பிட்ட நாட்களுக்குள் மனுதாரர் ஆட்சேபனை ஏதும் சட்டமன்ற தொகுதிக்கான வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு அதனால் திருத்தம் செய்ய ஆணைகள், சேர்த்தல், திருத்தம் குறித்து வரப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 19.02.2022ல் தேர்தல் காலங்களில் பணிபுரிந்த செயல் அலுவலர், திருமதி. நா. சசிகலா, மதுரை மாவட்டத்திற்கும், இளநிலை உதவியாளர் திரு. ச.ஐ. ஆரோக்கியசாமி கோம்பை பேரூராட்சிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் மற்றும் எதிர்மனுதாரரான குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 31.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. S.D. ராஜ்கபூர் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட 7-வது வார்டில் வசித்து வரும் நான், சட்டமன்ற தொகுதிக்கான வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் எனது பெயரினை குச்சனூர் உத்தமபாளையம் சாலையானது 7-வது வார்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் எனது பெயரானது இந்திராகாந்தி தெரு அமைந்துள்ள வார்டு எண்.11-ல் முறைகேடாக சேர்த்து பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. சசிகலா மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி ஆகியோர் உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளனர். இதனால் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் நிதியிழப்பிற்கு உரிய இழப்பீடு வழங்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ப. முருகன் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

"மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவர் சமர்ப்பித்துள்ள 16.06.2025 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள வாக்காளர் பட்டியலில் அவரது பெயரினை 7-வது வார்டிலிருந்து 11-வது வார்டிற்கு வேண்டுமென்றே மாற்றியுள்ளதாக தெரிவித்துள்ள புகாரினை குறித்து உரிய ஆவணங்களை பரிசீலித்து எனது விரிவான அறிக்கையுடன் பிரிதொரு நாளில் விசாரணை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு இம்முறை நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என கேட்டுக்கொண்டுள்ளார்.

7. எதிர்மனுதாரரான குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் பிரிதொரு நாளில் விசாரணை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவர் சமர்ப்பித்துள்ள 16.06.2025 நாளிட்ட புகார் மனுவை விசாரிக்க 29.08.2025 அன்று நடைபெறும் மறுவிசாரணைக்கு ஆஜராகுமாறு குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு 08.08.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. எதிர்மனுதாரர்கள் திரு. ப. முருகன், செயல் அலுவலர் மற்றும் திரு. ம. முத்துப்பாண்டி, தூய்மைப் பணியாளர், குச்சனூர் பேரூராட்சி ஆகியோர் 29.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில் –

"தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட உத்தமபாளையம் சாலையில் அமைந்துள்ள 7-வது வார்டில் வசித்து வரும் மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவரின் பெயர் சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் 7வது வார்டில் இடம் பெற்றிருந்தபோது அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. ந. சசிகலா மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி என்பவர்கள் மனுதாரரின் பெயரினை உள்ளாட்சி மன்றத் தேர்தல் 2021-ல் இந்திராகாந்தி தெரு

11-வது வார்டில் மாற்றியுள்ளனர். இதனை மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் ஆட்சேபனை தெரிவித்தும் அவரது கோரிக்கையினை நிராகரித்ததால் செயல் அலுவலர் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று வரும் உள்ளாட்சி மன்ற தேர்தலில் மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் பெயரினை வாக்காளர் பட்டியலில் தற்போது தவறுதலாக இடம் பெற்றுள்ள இந்திராகாந்தி தெரு, 11-வது வார்டிலிருந்து உத்தமபாளையம் சாலையில் அமைந்துள்ள 7-வது வார்டிற்கு மாற்றம் செய்து திருத்திய வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் உறுதிப்பட தெரிவித்துக்கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளனர்.

9. இதற்கிடையில் குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.08.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 205/2025-ல் கீழ்க்காணும் கூடுதல் விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியில் 19.02.2022ஆம் நாள் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவரின் பெயரை வார்டு மாற்றி 11-வது வார்டுக்கு மாற்று உள்நோக்கத்துடன் செயல்பட்டதற்கும் அவர்களால் ஏற்படுத்திய மன உளைச்சல் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் ஆகியவற்றிற்கும் இழப்பீடு வழங்கிட கேட்டுள்ளதற்கு, மாநில ஆணையத்தில் நேரில் விசாரணை நடத்தப்பட்டது. குச்சனூர் பேரூராட்சி அலுவலக கடித ந.கஎண். 205/2025 நாள் 01.09.2025-ல் வாக்காளர் மாற்றம் செய்யப்பட்ட வார்டு 7 உள்ள திரு. தீ. ராஜ்கபூர் த/பெ. தீன் முகமது உத்தமபாளையம் சாலை குச்சனூர் என்பவருக்கு அவரது வாக்கினை வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வார்டு 7க்கு மாற்றம் செய்யப்படும் என்ற கடிதம் அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் தங்களின் நடவடிக்கைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது". எனத் தெரிவித்துள்ளார்.

10. மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தூய்மைப் பணியாளர், வாக்குமூலம் மற்றும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தேனி மாவட்டம், குச்சனூர் இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவர் தனது 16.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட 7-வது வார்டில் வசிக்கும் மனுதாரரின் பெயரினை (S.D. ராஜ்கபூர்) வாக்காளர் பட்டியலில் 7-வது வார்டிற்கு பதிலாக 11-வது வார்டில் உள்நோக்கத்துடன் பேரூராட்சி செயல் அலுவலர் மாற்றம் செய்துள்ளார் என புகாராக தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சியின் செயல் அலுவலர் திருமதி. சசிகலா மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி ஆகியோர் குச்சனூர் பேரூராட்சியில் பணிபுரிந்த காலத்தில் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட 7-வது வார்டில் வசித்து வரும் மனுதாரரின் பெயரான ராஜ்கபூர் என்கிற பெயர் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்கு 2021-ல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் பாகம் எண். 302 7-வது வார்டில் உள்ள குச்சனூர் உத்தமபாளையம் சாலை – வாக்காளர் அட்டை எண். CRN2437861 என தொடர் எண். 88-ல் இடம் பெற்றுள்ளது என்பதும்

ஆனால் 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலினை ‘Z’ (சிக்ஜாக்) முறையில் வார்டு பிரிவினை செய்யப்பட்டதால் மனுதாரரின் பெயர் வார்டு எண்.11-ல் வரப்பட்டுள்ளது என்பதை செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் மனுதாரர் தனது பெயர் வார்டு எண். 7-ல் இடம் பெறுவதற்கு பதிலாக வார்டு எண். 11-ல் இடம் பெற்றுள்ளதை குறித்து பேரூராட்சி செயல் அலுவலரிடம் ஆட்சேபனை தெரிவித்து புகார் அளித்துள்ளார் என்பதும், அதற்கு குச்சனூர் பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் திருமதி. ந. சசிகலா என்பவர் மனுதாரருக்கு 03.01.2022 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்படுவதாக தெரிவித்த நிலையில் அதே மனுதாரரிடமிருந்து குச்சனூர் பேரூராட்சியில் தேர்தலை இரத்து செய்யக் கோரி பெறப்பட்ட மனுவிற்கு செயல் அலுவலர் தனது 31.01.2022 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதை ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் ஆட்சேபனை தெரிவித்தும் வாக்காளர் பட்டியலில் வார்டினை மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்த செயல் அலுவலர் திருமதி ந. சசிகலா தனது பதவிக்கான கடமையை சரிவர செய்ய தவறிய குற்றச்சாட்டிற்கும் மற்றும் இதர குற்றச்சாட்டுகளுக்கும் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை பேரூராட்சிகளின் இயக்குநரால் எடுக்கப்பட்டு , தனியரின் ஊதிய உயர்வினை 3 வருடங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யும் தண்டனை வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவரின் கோரிக்கை குறித்து மாநில தேர்தல் ஆணையத்தில் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரரின் பெயரை வருகின்ற உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் வார்டு எண். 7-ல் மாற்றம் செய்யப்படும் என தெரிவித்துள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்த செயல் அலுவலர் திருமதி. ந. சசிகலா என்பவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ள நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் திரு. S.D. ராஜ்கபூர் என்பவரின் பெயரை வருகின்ற உள்ளாட்சி தேர்தலுக்கான குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் 7-வது வார்டில் இடம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.D. ராஜ்கபூர்,
வார்டு 7, பள்ளிவாசல் தெரு,
குச்சனூர் - 625 515
தேனி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
குச்சனூர் பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்
14/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032